## IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 319/2013 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | **திரு. செந்தில்குமார்** | | | |
| **Father's Name** | **:** | த/பெ. லாசர் | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 31.01.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆட்டோ ஓட்டுனராக வேலைச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களைத் தெரியும். 16.11.2009 ம் தேதி மதியம் 02.00 மணி அளவில் குளச்சல் ஆட்டோ ஸ்டேண்டில் நான் என் வாடகை ஆட்டோவில் இருந்தேன். நான் எனது ஆட்டோவை பின்னோக்கி எடுத்த போது ஆட்டோவின் பின்னால் எதிர்பாராமல் ஒரு நபர் வந்துவிட்டார். ஆனால், அவர் மீது ஆட்டோ இடிக்கவில்லை.

2. அப்போது 1வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான சுரேஷ் என்பவர் ஓடி வந்து தாயோளி என்று தகாத வார்த்தைகள் பேசி கைகளால் என்னை அடிக்க வந்தார். நான் தட்டிவிட்டேன். அதன்பிறகு அங்கு நின்றுக்கொண்டிருந்த சுபாஷ்மற்றும் சுரேஷ் ஆகியோர்கள் ஆட்டோவில் கிளம்பி சென்றுவிட்டார்கள். அதன் பிறகு அன்றையதினமே மாலை 06..00 மணிஅளவில் எனது அக்காவின் மகளுக்குசுகமில்லை என்று 3வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆட்டோவை வாடகைக்காக என்னிடம் கேட்டார். அவர் பத்தறையில் உள்ள பினு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவேண்டுமென்று கூறினார்.

3. நான் 3வது குற்றம் சுமத்தப்பட்ட நபரை ஆட்டோவில் ஏற்றிக்கொண்டு ரீத்தாபுரம்

செல்லும் வழியில் ஆட்டோவில் மற்றொரு நபரும் ஏறவேண்டுமென்று கூறியதால் நான் ரீத்தாபுரம் அருகே ஆட்டோவை நிறுத்தினேன். அப்போது 5 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான பிரசாத் என்பவர் ஆட்டோவில் ஏறினார். பத்தறை அருகே செல்வதற்கு 2 நிமிடத்திற்கு முன்பே ஆட்டோவில் இருந்த இரண்டு நபர்களும் எனது கையை பின்னோக்கி இழுத்துப் பிடித்துக்கொண்டார்கள். அப் போது 2 வது குற்றம் சுமத்தப்பட்ட நபரான சுபாஷ் கல்லால் எனது வலது கண்ணில் அடித்தார். மேலும், 1 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் சுரேஷ் என்பவர் கட்டையால் எனது உடம்பு மற்றும் தலை ஆகிய பகுதிகளில் அடித்தார்.

4. மற்ற குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் ஒன்றாக சேர்ந்து என்னை கம்பு கொண்டு என்னை உடம்பின் பல பகுதிகளில் அடித்தார்கள். மேலும், என்னை கிணற்றினுள் வீழ்த்திவிட வேண்டுமென்று முற்படும்போது ஆட்கள் கூடிவிடவே என்னை கீழே போட்டுவிட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். ஊரிலுள்ள நபர்கள் என்னை பினு மருத்துவமனையில் அனுமதித்தார்கள். அதன் பின் ஆம்புலன்சில் என்னை சிகிட்சைக்காக ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனை அழைத்துச் சென்றார்கள். சம்பவம் சம்மந்தமாக நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது எனக்கு வலது கண் பார்வை சுத்தமாக தெரியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். எனக்கு மது அருந்தும் பழக்கம் கிடையாது. புகார் வாக்குமூலம் நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதிக்கொண்டார்கள். நான் படித்துப் பார்த்தேனா என்றால் இல்லை. நான் சொன்னதை அவர்கள் திரும்ப சொன்னார்கள். அதன் பின்னர் தான் கையொப்பம் செய்தேன்.

2. மதியம் 02.00 மணிக்கு நடந்த சம்பவம் தொடர்பாக தனியாக புகார் எதுவும் தரவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும் சொன்னேன். நான் மதியம் 02.00 மணி சம்பவத்தில் ஒரு நபர் குறுக்கே வந்ததை என்னுடைய புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொன்னேன். அவர்கள் எழுதினார்களா என்று எனக்குத் தெரியாது. கற்றறிந்த வழக்கறிஞர் புகார் வாக்குமூலத்தை சாட்சியிடம் காண்பித்து படிக்கச் சொல்லி கேட்டதற்கு சாட்சி படித்துப் பார்த்துவிட்டு குறுக்கே வந்த நபர் வந்த வாசகம் இல்லை என்று சொல்கிறார். நான் வழக்கிற்காக

பொய்யாக மேற்படி சங்கதியை மிகைப்படுத்திச் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. எனது புகார் வாக்குமூலத்தில் 2 அடையாளம் தெரிந்த நபர்கள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். அந்நேரம் அவர்கள் பெயர்கள் எனக்குத் தெரியவில்லை. ஆட்டோசென்றுக்கொண்டிருக்கும் போது ஏறிய நபர்களின் பெயர்களையும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த நேரம் அவர்கள் பெயர்கள் எனக்குத் தெரியவில்லை. பத்தறை சிவன்கோவிலுக்கு குளச்சல் ஸ்டேண்டில் இருந்து ஒரு கால் மணி நேரத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். ரீத்தாபுரம் வழியாக சென்றால் நேரம் பிடிக்கும். இவர்கள் ரீத்தாபுரம் வழியாக தான் என்னை கூட்டிச்சென்றார்கள்.

4. அப்படியென்றால் 20 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் நான் மெதுவாக தான்சென்றேன். நான் எத்தனை மணிக்கு சென்றேன் என்று சொன்னால் டயம் உறுதியாக சொல்லமுடியாது. ஆனால் 06.30 மணிக்கு சம்பவம் நடந்து முடிந்துவிட்டது. சிவன்கோவில் பின்னால் சென்றுவிட்டேன். ஆட்டோவில் ஏறும்போது குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் கையில் ஆயுதம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

5. கம்பின் நீளம் எனக்குத் தெரியாது. எத்தனை கம்பு வைத்திருந்தார்கள் என்று நான் பார்க்கவில்லை. சுபாஷ், சுரேஷ் என்னை அடித்தார்கள். சுபாஷ் கல்லாலும், சுரேஷ் கம்பாலும் அடித்தார்கள். எவ்வளவு நேரம் அடி நடந்தது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நான்சற்று நேரத்தில் கீழே விழுந்துவிட்டேன். பினு மருத்துவமனையில் தான் நினைவு வந்தது.

6. என்னை தாக்கிய கல் மற்றும் கம்பில் என் இரத்தம் பட்டிருக்குமா என்றால் இரவு நேரம் என்பதால் அதை எல்லாம் பார்த்துக்கொண்டா இருப்பார்கள் சார். எனது உடையில் இரத்தம் பட்டிருந்ததா என்றால் - ஆம் பட்டிருந்தது. அதை ஒப்படைத்தார்களா என்றால் அது எனக்குத் தெரியாது. தரையில் இரத்தம் பட்டிருந்ததா என்றால் இரவு நேரம் என்பதால் எனக்குத் தெரியவில்லை. சம்பவயிடம் இருட்டான பகுதி என்று சொன்னால் சரிதான். அதனால் யார் யார் என்னை அடித்தார்கள் என்று தெரியாது என்று சொன்னால் நான் அடித்ததை தான் சொல்லிவிட்டேனே. இருட்டான பகுதி என்னையார் அடித்தார்கள் என்று தெரியாது என்றால் சுபாஷ், சுரேஷ் அடித்தார். மற்றவர்களும் அடித்தார்கள். யார் யார் எங்கு அடித்தார்கள் என்று குறிப்பிட்டுச் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. சுரேஷ் கம்பால் தலை, கை கால்களில் அடித்தார். சுபாஷ் கல்லால் வலது கண் பகுதியில் அடித்தார். மற்றவர்கள் கூடி நின்று அடித்தார்கள். எங்கு அடித்தார்கள் என்று குறிப்பாக சொல்ல இயலாது.

7. ஆம்புலன்ஸ் எத்தனை மணிக்கு வந்தது என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்சிற்கு யார் தகவல் தந்தார்கள் என்றால் தெரியாது. பினு மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றோம் என்று தெரியவில்லை. அங்கு எனக்கு சிகிட்சை அளிக்கப்பட்டதா என்றால் ஆம், பார்மாலிட்டிக்காக சிகிட்சை அளிக்கப்பட்டு ஆசாரிபள்ளத்திற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். ஆசாரிபள்ளம் மருத்துவமனைக்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்று எனக்கு ஞாபகமில்லை. என்னுடன் என் அம்மாவும் வந்தார். பினு மருத்துவமனைக்கு நான் சென்றதை என் புகார் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் எழுதியுள்ளார்களா என்று எனக்குத் தெரியாது. சாட்சியிடம் புகார்வாக்குமூலத்தை படித்துப் பார்க்க சொன்னதற்கு

எழுத்துக்கள் எல்லாம் கூட்டு எழுத்துக்களாக இருப்பதால் வாசிக்க தெரியவில்லை என்று கூறுகிறார். போலீசார் 17ம் தேதி மாலை 05.00 மணிக்கு வந்தார்கள். போலீசார் என்னை விசாரிக்கும்போது என் உறவினர்கள் எத்தனை பேர்கள் இருந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அருள், கிறிஸ்துராஜ், பாபு, கிருஷ்ணன் எனது நண்பர்களா என்றால் ஆம் நண்பர்கள் தான். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் நண்பர்கள் தான்.

8. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் வீடுகள் உள்ளதா என்றால் நான் கவனிக்கவில்லை, தென்னம்தோப்பு இருந்தது. நான் தினமும் மது அருந்திவிட்டு பிரச்சினை செய்வேன் என்றும் எங்கோ ஏற்பட்ட காயத்திற்கு குற்றம் சுமத்தபபட்ட நபர்கள் மீது பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்மந்தம் உண்டு.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

**சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.**

**நீதித்துறை நடுவர்,**
**இரணியல்.**